ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1763/11 - 2012 ජුනි මස 19 වැනි අඟහරුවාදා - 2012.06.19

*1763/11 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்டங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 01 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும் 2012, மே மாதம் 11 ஆந் திகதிய 1757/23 ஆம் இலக்கமும் கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட சீனி (எச். எஸ். தலைப்பு 17.01) தொடர்பான அறிவித்தல் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*சரத் அமுனுகம,*
*பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, யூன் 19.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| | 17.01 | | கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோறோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் | |
| | | | பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப்படாதவையும் நிற மூட்டப்படாதவையும் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| | | 1701.11 | கரும்புச் சீனி | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.12 | பீற் சீனி | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | | பிற | |
| | | 1701.91 | மேலதிக மணமூட்டிகைகளையுமோ நிறமூட்டுகைகளையுமோ கொண்டவை | |
| | | 1701.91.10 | சீனி | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.91.90 | பிற | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99 | பிற | |
| | | 1701.99.10 | வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.20 | வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.30 | பிற சீனி | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.90 | பிற | ரூபா 20 கி. கிராம் ஒன்றுக்கு |

7-294

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.